**ஒரு லிட்டர் பால் 24 ரூபாய்...லிட்டருக்கு 24 ரூபாய்.2 மணி நேரமே போதும்.**

'பாலுக்கும் கரும்புக்கும் கட்டுப்படியான விலை கேட்டு விவசாயிகள் போராடாத நாளே கிடையாது' எனச் சொல்லலாம். அந்தளவுக்கு விவசாயிகளைப் பாடாய்படுத்துகிறது, கொள்முதல் விலைப் பிரச்னை. ஒரு லிட்டர் பால் 28 ரூபாய்க்கு விற்கப்பட்டாலும், உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் விலை என்னவோ... 17 ரூபாய்தான்.




ஆனால், அதற்காக கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், நேரடி விற்பனையில் குதித்து, நல்ல லாபத்தை ஈட்டும் விவசாயிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான், திருவாரூரைச் சேர்ந்த சக்திவேல். கடந்த இரண்டு ஆண்டுகளாக பால் பண்ணை நடத்தி வரும் இவர், தன் வீட்டுத் திண்ணையிலேயே வெற்றிகரமாக விற்பனை செய்து வருகிறார்.

**பாலைவனத்திலிருந்து பால் பண்ணைக்கு!**

காலை நேர பால் விற்பனையில் பரபரப்பாக இருந்த சக்திவேலை சந்தித்தபோது... "விவசாயக் குடும்பமா இருந்தாலும், நான் டிப்ளமோ இன் ஹோட்டல் மேனேஜ்மெண்ட்

முடிச்சிட்டு, 14 வருஷம் அரபு நாடுகள்ல வேலை பார்த்தேன். அங்க இருக்கும்போது தமிழ்ப் புத்தகங்கள் விக்கிற கடைகள் மூலமா 'பசுமை விகடன்' அறிமுகமாச்சு. தொடர்ந்து படிக்க ஆரம்பிச்சதுல, சொந்த ஊருக்குத் திரும்பி, விவசாயத்துலயே இறங்கிடணும்னு ஆசை வந்துடுச்சு. ஒரு கட்டத்துல மாசம்

75 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிட்டு இருந்த வேலையை உதறிட்டு... மனைவி, குழந்தைகளோடு ஊருக்குத் திரும்பிட்டேன்.




வெளிநாடுகள்ல இருக்குறப்போ தண்ணி கலக்காத சுத்தமான சுவையான பாலைக் குடிச்சே வளந்த என் குழந்தைகளுக்கு இங்க கிடைச்ச பாக்கெட் பால், சரிப்பட்டு வராம போயிடுச்சு. சுத்தமான பால் வேணுமேனு யோசிக்க ஆரம்பிச்சப்பதான்... பால்பண்ணை வைக்கற யோசனை வந்துச்சு. எங்களோட நிலத்துலயே 14 மாடுகளோட பண்ணையைத் தொடங்கிட்டேன். பண்ணைக்கான உத்தேச வரவு- செலவைப் போட்டுப் பார்த்தப்போ... 'பாலை, கூட்டுறவுச் சங்கம் மாதிரியான இடங்களுக்குக் கொடுத்தா கட்டுபடியாகாது'னு தோணுச்சு. அதனால, 'நேரடி விற்பனைதான்'னு முடிவு பண்ணிட்டேன்.

**திண்ணையிலேயே விற்பனை!**

நான் வெச்சிருக்குற மாடுக எல்லாமே ஜெர்சி, ஹெச்.எஃப் கலப்பின மாடுகள்ங்கறதால தினமும் சராசரியா 120 லிட்டர் வரை பால் கிடைக்குது. பண்ணையிலிருந்து ஒரு கிலோ

மீட்டர் தூரத்துலதான் எங்க வீடு. அதனால பாலைக் கறந்ததுமே டூவீலர் மூலமா எடுத்துக்கிட்டு வந்து திண்ணையில வெச்சே விற்பனையைத் தொடங்கிடுவேன்.

ஒரு சொட்டுகூட தண்ணி கலக்காம ஒரு லிட்டர் 24 ரூபாய்னு விக்கிறேன். சுத்தமான பசும்பால், அதோட சந்தை விலையைவிடக் குறைவு... அதனால மக்கள் தேடி வந்து வாங்கிட்டுப் போறாங்க. ஒரு மணி நேரத்துல மொத்தப் பாலும் வித்து முடிஞ்சிடும். காலையிலயும் சாயங்காலமும் சேர்த்து விற்பனைக்காக ரெண்டு மணி நேரம்தான் செலவு பண்றேன்.

**செலவில்லாமல் தீவனம்!**

மாடுகளுக்காக ஒரு ஏக்கர்ல கோ-4, ஒரு ஏக்கர்ல தண்ணீர் புல் (எருமைப் புல்)அரை ஏக்கர்ல சூடான் புல்னு சாகுபடி பண்ணிக்கிட்டுருக்கேன். 8 ஏக்கர்ல நடக்கற நெல் சாகுபடியை அப்பா பார்த்துக்கறார்.

மாட்டுக் கொட்டகையைக் கழுவுற நீரை வயலுக்குப் பாயுற தண்ணியில கலந்து விட்டுடுவோம். சாணத்தையும் உரமா பயன்படுத்திக்கிறோம். அதனால செலவில்லாம தீவனத்தையும் உற்பத்தி பண்ணிக்கிறோம்" என்றவர், பண்ணை அமைப்பது மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றி விளக்க ஆரம்பித்தார்.

**குடிதண்ணீர்... கவனம்!**

கொட்டகையில் கொஞ்சம்கூட தண்ணீர் தேங்காத அளவுக்கு, சாய்வாக தரைத்தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். மாட்டுச் சிறுநீர், கொட்டகை கழுவி விடும் தண்ணீரும்

ஓடுவதற்கு வாய்க்கால் போன்ற அமைப்பையும் வாய்க்காலின் முடிவில், தொட்டியையும் கட்டிக் கொள்ள வேண்டும்.

மாடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கொட்டகையின் நீளத்தை அமைத்துக் கொள்ளலாம். எப்பொழுதும் மாடுகளுக்கு குடிதண்ணீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் கிடைக்காவிட்டால், மாட்டின் உடல் சூடு அதிகரித்து, பால் அளவு குறைந்து விடும். தவிர, சாணம் கெட்டியாகிக் கொண்டு மலச்சிக்கல் ஏற்படும்.



பசுக்கள் குடிக்க தண்ணீர்...



கால்களுக்கு மிருதுவான ரப்பர் சீட்...

**சுத்தம்... சுகாதாரம்!**

பால் கறப்பதற்கு முன்பும், கறந்த பிறகும் மடியைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். தினமும் இரண்டுவேளை குளிப்பாட்ட வேண்டும். கொட்டகைக்குள் சாணத்தைச் சேர விடாமல் அவ்வப்போது அள்ளி விட்டால்... ஈக்களின் தொல்லை இருக்காது. கலப்பின மாடுகளாக இருக்கும்பட்சத்தில் தரையில் மிருதுவான ரப்பர் விரிப்பை விரித்து அதன்மேல்தான் மாடுகளை நிற்க வைக்க வேண்டும். இவற்றின் எடை அதிகமாக இருப்பதால், சாதாரண தரையில் நிற்கும்போது குளம்பு தேய்ந்து புண்ணாகிவிடும்.

**காளை மூலம் இனப்பெருக்கம்!**

தினமும் இரண்டு மணி நேரமாவது மாடுகளைக் காலாற நடக்கவிட வேண்டும். ஒவ்வொரு மாட்டுக்கும் தினமும் 15 கிலோ பசுந்தீவனம், 8 கிலோ வைக்கோல் ஆகியவற்றை உணவாகக் கொடுக்க வேண்டும். 6 கிலோ அடர்தீவனம், 2 கிலோ தவிடு ஆகியவற்றை தண்ணீரில் கலந்து குடிக்கக் கொடுக்க வேண்டும். கூடுமான வரைக்கும் காளைகள் மூலமாகவே இனப்பெருக்கம் செய்வது நல்லது. அதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால், மட்டும் செயற்கைக் கருவூட்டல் செய்து கொள்ளலாம்" என்று விவரங்களைத் தெளிவாக அடுக்கிய சக்திவேல், வருமானம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

**30,000 ரூபாய் லாபம்!**

"ஒரு நாளைக்கு சராசரியா 120 லிட்டர் பால் கிடைக்குது. அதன் மூலமா ஒரு நாளைக்கு 2,880 ரூபாய்னு மாசத்துக்கு 86,400 ரூபாய் வருமானம் கிடைக்குது. சினை மாட்டுக்கு, கறவை மாட்டுக்குனு வெவ்வேற விகிதங்கள்ல அடர் தீவனம், பசுந்தீவனங்களைக் கொடுக்குறப்போ 14 மாடுகளுக்கும் சேர்த்து தீவனத்துக்கு ஒரு நாளைக்கு 1,200 ரூபாய்ல இருந்து 1,600 ரூபாய் வரை செலவாகும் (பசுந்தீவனம், அடர் தீவனம், வைக்கோல், தவிடு எல்லாம் சேர்த்து). சராசரியா மாசத்துக்கு தீவனச் செலவு 45,000 ரூபாய் ஆகிடும்.



பசுந்தீவனத் தோட்டம்...



சுத்தம், ரொம்ப முக்கியம்...

இதுபோக, மருத்துவச் செலவு, பராமரிப்பு, மின் கட்டணம், போக்குவரத்துனு மாசம் 20,000 ரூபாய்னு வெச்சுக்கிட்டா... மொத்தம் 65,000 ரூபாய் வரை செலவாகும். எல்லாச் செலவும் போக 21,400 ரூபாய் லாபமா கிடைக்கும். பசுந்தீவனத்தை நானே உற்பத்தி பண்றேன், நெல் சாகுபடி பண்றதால வைக்கோலும், தவிடும் கிடைச்சிடுது. இதனால... மாசம் 10,000 ரூபாய் வரைக்கும் தீவனச்செலவு மிச்சமாகிடுது. ஆகக்கூடி 14 மாடுங்க மூலமா எப்படியும் மாசம் 30,000 ரூபாய்க்கு மேல லாபம் கிடைக்குது" என்றார் சந்தோஷமாக.

இயற்கை வைத்தியம் தான் சிறந்தது!

சக்திவேல் தனது மாடுகளுக்கு இயற்கை முறையில்தான் வைத்தியம் செய்து கொள்கிறார். அதுபற்றிப் பேசிய சக்திவேல், "பசுமை விகடனும், சேவா அமைப்பும் இணைந்து நடத்தின 'கால்நடைகளுக்கான இயற்கை மூலிகை வைத்திய செயல்முறை பயிற்சி வகுப்பு'ல கலந்துக்கிட்ட பிறகு, மாடுகளுக்கு மூலிகை வைத்தியம்தான் பாத்துக்குறேன். பொதுவா... கலப்பின மாடுகளுக்கு மூலிகை வைத்தியம் எடுபடாதுனு சொல்வாங்க. ஆனா, அந்த மாடுகளுக்கும் மூலிகை மருந்து

நல்லாத்தான் வேலை செய்யுது" என்றவர் சில வைத்திய முறைகளையும் சொன்னார். அவை-

**மடிவீக்கத்துக்கு பேய்ப்பீர்க்கன்!**

'மடிவீக்க நோய் தாக்கினால் உடனே கண்டுபிடித்து, சிகிச்சை அளித்துவிட வேண்டும். இல்லையென்றால், காம்புகள் செயலிழந்து, பால் கறக்கும் தன்மை பாதிக்கப்படும். பால் கறக்கும்போது காம்பில் சின்னதாக பால் கட்டி இருப்பது போலத் தெரிந்தால்... அந்தக் காம்பில் இருந்து பாலோடு கட்டியையும் சேர்த்து கறந்து எடுக்க வேண்டும். அந்தப் பாலைப் பயன்படுத்தக் கூடாது. பிறகு, மடியைக் கழுவி, பேய்ப்பீர்க்கன் இலையை அரைத்து, பற்றுப் போட்டுக் காம்பில் வேப்பங்குச்சியை செருகி வைக்க வேண்டும். நோய் குணமாகும் வரை தினமும் காலையும் மாலையும் இதுபோல செய்து வர வேண்டும். பால் பீய்ச்சும் நேரம் தவிர மற்ற நேரங்களில் வேப்பங்குச்சி காம்பிலேயே இருக்க வேண்டும். கால் கிலோ அளவுக்கு எலுமிச்சையை நறுக்கி, உண்ணக் கொடுத்தாலும் மடிவீக்கம் குணமாகும்.

**குடற்புழு நீக்கம்!**

பீநாரி, சங்கு இலை, நொச்சி, சோற்றுக் கற்றாழை, எருக்கன் இலை ஆகியவற்றில் தலா ஒரு கிலோ எடுத்து தனித் தனியாக அரைத்துக் கொள்ள வேண்டும். சிறிது வேப்பங்கொட்டையை இரண்டு மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து அனைத்தையும் ஒன்றாகக் கலந்து, ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் வைத்து ஏழு நாட்கள் வரை தினமும் காலையும் மாலையும் குச்சியால் கலக்கி வர வேண்டும். பிறகு, இக்கரைசலில் 100 கிராம் அளவுக்கு மாட்டுக்குக் கொடுத்தால் குடற்புழு வெளிவந்து விடும். கன்றுக்குட்டியாக இருந்தால், 50 கிராம் போதுமானது. தொடர்ந்து மூன்று மாதத்துக்கு ஒரு முறை இதைக் கொடுத்து வர வேண்டும்.

**கழிச்சலுக்குக் கத்திரிக்காய்!**

மாட்டுக்குக் கழிச்சல் நோய் வந்தால், ஒரு கிலோ கத்திரிக்காயை அடுப்பில் சுட்டுக் கொடுத்தால் குணமாகிவிடும். கன்றுக்குட்டியாக இருந்தால்... ஒரு கொண்டைக்கடலை அளவு பால் பெருங்காயத்தை சங்கில் இட்டு தண்ணீர் ஊற்றிக்

| |
|---|
| கரைத்து, வாயில் ஊற்றினால், சரியாகி விடும். காய்ச்சல் வந்த மாட்டுக்கு 200 கிராம் சின்ன வெங்காயம், 25 கிராம் வெந்தயம், 50 கிராம் சீரகம், 50 கிராம் மிளகு ஆகியவற்றை அரைத்துக் கொடுத்தால், காய்ச்சல் சரியாகி விடும். |

**தொடர்புக்கு**

சக்திவேல், அலைபேசி : 99945-69790

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.8.11